# கிறிஸ்துவுக்குள் குழந்தைகளுக்கு, வளர்ந்தவர்களின் அறிவுரை [9:23-30; 22:17-21]

*இயேசு நிக்கொதேமுவிடம் பேசும்போது மனந்திரும்புதலின் செயல்பாட்டைப் பிறப்புடன் ஒப்பிட்டுக் காட்டினார். அந்த யூத அதிகாரியினிடத்தில் அவர், "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" (யோவா. 3:3; இ.வ. யோவா. 3:5; 1 பேது. 1:22, 23) என்று கூறினார். புதிய ஏற்பாடானது, புதுக் கிறிஸ்தவர்களை "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்" (1 கொரி. 3:1; எபி. 5:13 ஐயும் காணவும்) என்று குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கும் புதுக் கிறிஸ்தவர்கள் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு உண்டாகும் எல்லாவித இடர்ப்பாடுகளுக்கும் மற்றும் இன்பங்களுக்கும் ஆளாகின்றார்கள்.*

*நமது கடந்த பாடத்தில் நாம், தர்சுப் பட்டணத்தானாகிய சவுலின் (அப்போஸ்தலனாகிய பவுல் என்பதாக நன்கு அறியப்பட்டவரின்) "புதிய பிறப்பின் செயல்பாட்டைக்" கண்டோம். இந்தக் கட்டுரையில் நாம், அப். 9ல் நமது பாடத்தைத் தொடர்ந்து படிக்கையில் புதிய கிறிஸ்தவராயிருந்த சவுலின் தொடக்க நாட்களைப் பற்றிக் காண்போம். இந்த விபரத்திலிருந்து, "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளுக்கு, வளர்ந்தவர்களின் அறிவுரைகள்" சிலவற்றை நாம் பெற்றுக் கொள்வோம்.*

## உங்கள் குடும்பத்தை மதியுங்கள் (9:19, 20, 26-28, 30)

*சிறு குழந்தைகள் இயல்பாகவே இறக்கக் கூடிய வாய்ப்பை அதிகம் பெற்றிருக்கின்றார்கள் என்று ஒரு மருத்துவர் என்னிடத்தில் ஒருமுறை கூறினார். புதிதாய்ப் பிறந்த நிலையில் இருக்கும் மற்ற சில உயிரினங்களைப் போல் அல்லாது, மனிதக் குழந்தைகளுக்குத் தொடர்ந்த கவனிப்பு அவசியமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையான கவனிப்பைத் தருவதற்காகவே தேவன், குடும்பம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கின்றார். பிறந்த குழந்தைகளைக் காட்டிலும், புதுக் கிறிஸ்தவர்களின் மரண விகிதம் அதிகமாயிருக்கின்றது. கிறிஸ்துவுக்குள் குழந்தைகளைப் பெலப்படுத்துவதற்காகவும், ஊக்கப்படுத்துவதற்காகவும், தேவன் - சபை (2:41, 47) என்ற - இன்னொரு குடும்பத்தை அளித்துள்ளார். பவுல் இதை "தேவனுடைய வீடாகிய ஜீவனுள்ள தேவனுடைய சபை" (1 தீமோ. 3:15) என்று கூறினார். ஒரு மொழிபெயர்ப்பில் "தேவனுடைய வீடு" என்பதற்குப் பதில் "தேவனுடைய குடும்பம்" என்று உள்ளது.*

*தங்கள் குடும்பத்தை மதிக்காத பிள்ளைகளை நான் அறிவேன். தேவனால் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய குடும்பத்தை முழுமையாக மதிக்காத கிறிஸ்தவர்களையும் நான் அறிவேன் என்பது துரதிர்ஷ்டவசமானதாகும். புதிய கிறிஸ்தவர்கள் சபையை மதிப்பதும், கர்த்தர் அளித்துள்ள இச்சபையிலிருந்து அனுகூலம் பெற்றுக் கொள்வதும் அவர்களுக்குத் தேவை.*

*சபையின் முக்கியத்துவத்தை உணராதவர்கள், சவுலின் மனமாற்றத்தை அதிக நெருக்கமாய்ப் பார்க்க வேண்டியது அவசியமாகும். துன்பப்படுத்திக் கொண்டிருந்த இவருக்குச் சாலையிலே இயேசு தரிசனமானபோது, "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" (9:4) என்று கேட்டார். சவுல் இயேசுவைத் தனிப்பட்ட வகையில் துன்பப்படுத்தியிருக்கவில்லை; மாறாக அந்த இளம் மனிதர் இயேசுவின் சீஷர்களைத் துன்பப்படுத்தியிருந்தார் (8:1-3). இயேசுவின் சீஷர்களை ஒருவர் தவறாக நடத்தினால், அவர் இயேசுவையே தவறாக நடத்துகின்றார். இந்தச் சிந்தனை ஓட்டத்தை இன்னும் சற்று தூரம் சென்று பார்ப்போம். சவுல், சபையைக்*

*குறிப்பிட்ட வகையில் துன்பப்படுத்தினார். அப். 8ல் "அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று ... சவுல் ... சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்" (வ. 1, 3) என்று நாம் வாசிக்கின்றோம். பவுல் தமது நிருபங்களில், தாம் சபையை உபத்திரவப் படுத்தியிருந்ததை வலியுறுத்தினார். "நான் தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே" (1 கொரி. 15:9); ''தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி ..." (கலா. 1:13). பிலிப்பியர் 3:6ல் பவுல் "சபையைத் துன்பப்படுத்தினவன்" என்று தம்மைக் குறிப்பிட்டார். இருப்பினும், சவுல் இயேசுவைத் துன்பப் படுத்தியதாக இயேசு கூறினார். இயேசுவையும் அவரது சபையையும் ஒருவர் பிரிக்க முடியாது என்பதே முடிவாகும்!*

*சவுல் ஞானஸ்நானம் பெற்றபோது, கர்த்தரால் அவர் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் (2:41, 47) மற்றும் அவர் (சவுல்) உடனடியாகத் தமஸ்குவில் இருந்த உள்ளூர் சபையின் ஐக்கியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார். (சவுல் ஞானஸ்நானம் பெற்றபோது அங்கிருந்தவர்களில் பலர், அவர் தண்ணீரிலிருந்து வெளியே வந்தபோது அவரது தோள்களில் தங்கள் கைகளைப் போட்டு, ''சகோதரர் சவுலே வருக!'' என்று வாழ்த்தியிருப்பார்கள் என்பதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது.) அவர் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, "தமஸ்குவிலுள்ள சீஷருடனே சில நாள் இருந்தார்" (வ. 19ஆ) என்று நமக்குக் கூறப்படுகின்றது. பிறகு, "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தார்'' (வ.20). கிறிஸ்துவுக்குள்ளான இந்தக் குழந்தை பிரசங்கிக்கத் தைரியம் பெற்றதற்கு, கிறிஸ்துவுக்குள் அவரது சகோதர சகோதரிகள் ஊக்கப்படுத்தியது ஒரு காரணமாகும்! பின்பு சவுலின் வாழ்க்கை அபாயத்தில் இருக்கையில், அவரது ஆவிக்குரிய குடும்பமானது அவரை மீட்க வந்தது (வ. 25).*

*சவுல் தமஸ்குவை விட்டு வெளியேறிய பிறகு, அவர் உடனடியாக எருசலேமுக்குத் திரும்பினார். எருசலேமில் கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகள் தம்மைச் சூழ்ந்திருப்பதையே அவர் விரும்பினார். நாம், ''சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே இணைந்து கொள்ளப் பார்த்தான்'' (வ. 26அ) என்று வாசிக்கின்றோம்.* KJV*யில் "சீஷருடனே சேர்ந்து கொள்ளப்பார்த்தான்" என்றிருப்பதே*

தகுதியானதாகும். "இணைந்து கொள்ள" அல்லது "சேர்ந்து கொள்ள" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "ஒட்ட வைத்தல் அல்லது இறுகப் பற்ற வைத்தல்" என்ற அர்த்தமுடையதாகும். மத். 19:5ல் இதே வார்த்தை "இசைந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (லூக். 15:5; அப். 5:13; 10:28ஐயும் காண்க). எருசலேமில் இருந்த உள்ளூர் சபையின் அங்கமாவதற்கு சவுல் விரும்பினார். மூலமொழியில் சீஷர்களுடன் இணைந்து கொள்வதற்கு அவர் தொடர்ந்து "முயற்சி மேற் கொண்டார்" என்று கூறப்படுவதால் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கர்த்தருடைய சபையில் ஒருவர் சேர்ந்து கொள்ள முடியாது, மாறாக ஒருவர் கர்த்தரால்தான் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட முடியும் என்பதை நாம் முன்னமே வலியுறுத்தி யிருக்கின்றோம் (2:41, 47). ஆயினும், கர்த்தருடைய சபை யாகிய உலகளாவிய சரீரத்திற்குள் ஒருவர் சேர்த்துக் கொள்ளப் பட்ட பிறகு அவர் தம்மை ஒரு உள்ளூர் சபையில் இணைத்துக் கொள்ள முடியும் (வேண்டும்). ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு உள்ளூர் சபையில் செயல்படும் உறுப்பினராயிருக்க வேண்டும்.[1] இவ்வாறு இருப்பதற்கே சவுல் விரும்பினார். தமஸ்குவில் சவுல் ஞானஸ்நானம் பெற்ற போது, அங்கிருந்த உள்ளூர் சபையில் அவர் இயல்பாகவே உறுப்பினரானார் - யார் ஒருவரும் ஞானஸ்நானம் பெறும்போது பொதுவாக இது போன்றே நடக்கின்றது.[2] அவர் எருசலேமுக்கு வந்தபோது, அங்குவந்து சேர்ந்ததாலேயே அவர் அந்த உள்ளூர் சபையின் அங்கமாகி விடவில்லை; ஆனால் அவர்களின் ஐக்கியத்தை அவர் விரும் பியதால், அவர்களில் ஒரு உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப் படுவதற்காக அவர் முயற்சி செய்யத் தொடங்கினார்.

இயேசு உலகளாவிய சபைக்காக மரித்தார், அந்த சபையின் முக்கியத்துவத்தை நாம் கண்டிருக்கின்றோம். உள்ளூர் சபையும் முக்கியத்துவம் வாய்ந்ததேயாகும். உண்மையில், உலகளாவிய சபைக்குக் கண்ணால் காணக்கூடிய, வாழக்கூடிய வெளிப்பாடாக இருப்பவை உள்ளூர் சபைகளே ஆகும். பவுல் தமது நிருபங்களை எழுதியபோது, "உலகளாவிய சபையார்" என்று அவர்களை அழைக்கவில்லை; மாறாக அவர், குறிப்பிட்ட பகுதிகளில் இருந்த குறிப்பிட்ட சபையாருக்கு அவைகளை எழுதினார் (1 கொரி. 1:2; 2 கொரி. 1:1; கலா. 1:2; 1 தெச. 1:1; 2 தெச. 1:1).

உள்ளூர் சபையின் முக்கியத்துவமானது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றது. வெளிப்படுத்தின விசேஷத்தில் கிறிஸ்து தம்மை, "ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருப்பவர்" என்று அடையாளப் படுத்திக் கொள்ளுகின்றார் (வெளி. 2:1; 1:4, 20), இவை ஆசியாவில் இருந்த "ஏழு (உள்ளூர்) சபைகளாகும்." முடிந்தால் நாம் அனைவருமே மூப்பர்களின் கண்காணிப்பின் கீழ் இருப்பது தேவையாகும் (எபி. 13:17),[3] ஆனால் மூப்பர்கள் தாங்கள் ஆராதிக்கும் உள்ளூர் சபையையே கண்காணிக்க வேண்டியவர்களாயிருக்கின்றார்கள் (20:28). நாம் ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சபையின் உறுப்பினராயில்லாத வரையில் அந்த சபையின் மூப்பர்களுடைய கண்காணிப்பின் கீழ் இருக்க முடியாது.

நீங்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும்போது, நீங்கள் சவுலைப் போலிருப்பது தேவையாகின்றது: எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அங்கு கர்த்தருடைய மக்கள்[4] இருக்கின்ற உண்மையான உள்ளூர் சபையொன்றைக் கண்டு பிடியுங்கள், அந்தக் கிறிஸ்தவக் குழுவினுள் "உங்களை இணைத்துக் கொள்ள" நீங்கள் விரும்புவதை அவர்கள் ஏதாவதொரு வழியில் அறிந்து கொள்ளட்டும்!

எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் பவுலை ஏற்றுக் கொள்வதற்கு முதலில் தயக்கம் காட்டினார்கள்,[5] ஆனால், பர்னபா சவுலின் மேல் தனிப்பட்ட ஆர்வம் கொண்டு, அவருக்குச் சான்று கூறியபோது, அவர் (பவுல்) அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார் (வ. 27). அதன் பிறகு அவர் கிறிஸ்தவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்தார் (வ. 28), அவர்களுடனான ஐக்கியத்தை மகிழ்ச்சியுடன் அனுபவித்தார். பின்பு அவர் (தமஸ்குவில் செய்தது போல) எருசலேமிலிருந்து தப்பியோட வேண்டியதாய் இருக்கையில், மறுபடியும் அவருக்கு கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள்தான் உதவி செய்து அவரது உயிரைக் காப்பாற்றினார்கள் (வ. 29, 30).

சவுல் தமது ஆவிக்குரிய குடும்பமான சபையை மதித்தார் என்பது தெளிவாகவே காணப்படுகின்றது. நீங்களும் கூட அப்படிச் செய்வீர்கள் என்று நான் நம்புகின்றேன்!

# பேசக் கற்றுக் கொள்ளுங்கள் (9:20-22, 27-29; 26:20)

குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ள வேண்டியதா யிருக்கின்றது. சிலர் விரைவாகக் கற்றுக் கொள்கின்றனர்; சிலர் சற்று அதிக காலம் எடுத்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் தங்களின் முதல் வார்த்தைகளைப் பேசும் போது நாம் எவ்வளவாய் மனவெழுச்சியடைகின்றோம்! சவுல் எவ்வளவு விரைவாய்ப் "பேசத்" தொடங்கினார் என்பதை நான் காணும் பொழுது, எனது முதல் மகளாகிய சிந்தியாவின் நினைவுதான் எனக்கு ஏற்படுகின்றது. அவள் (சிந்தி) மிகச் சிறுமியாக இருந்த பொழுதே, நாங்கள் பேசும் வார்த்தைகளைப் போலப் பேசுவதற்கு முயற்சி செய்வாள் ("hippopotamus", "rhinoceros" மற்றும் வேறு எந்த வார்த்தைகளும்). அவள் எவ்வளவு அதிகமாய்ப் பேச விரும்பினாளென்றால், சிலவேளைகளில் புதிதாக வருபவர்களுக்கு அவள் பேசுவதை ''விளக்கப் படுத்துவது" தேவை என்று நாங்கள் நினைத்தோம். "அவள் ஒரு உண்மை குணம் உடையவளாய் இருக்கிறாள், அவளது அப்பா ஒரு பிரசங்கியாராகவும், அவளது அம்மா ஒரு பெண்ணாகவும் இருக்கிறார்கள் அல்லவா?" என்று நாங்கள் கூறுவதுண்டு.

சவுல் "மறுபடியும் பிறந்த" உடனேயே - முழுவாக்கியங் களில் - இயேசுவைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார். வாரத்தின் எந்த நாளில் அவர் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார் என்று நாம் அறியவில்லை, ஆனால், அடுத்து வந்த ஓய்வு நாளிலேயே அவர் ஜெப ஆலயத்திற்குச் சென்றார்: "தாமத மின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்'' (9:20). சவுல் ஜெப ஆலயத்தில் இவ்வாறு செய்தபோது, அங்கிருந்தவர்கள் கிளர்ச்சியடைந்தார்கள் ஆனால் ஆச்சரியப்படவில்லை.[6] புகழ் பெற்ற கல்விமானும், வைராக்கியமுள்ளவருமான அந்த யூதர் அங்கிருப்பது அவர் களுக்கு ஒரு மேன்மையான விஷயமாகவே இருந்தது. போதனை செய்வதற்கான நேரம் வந்தபோது, பொறுப்பாள ராயிருந்தவர் சவுலினிடத்தில் திரும்பி, "சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள்" (13:15 ஐக் காணவும்) என்று கூறியிருக்கலாம். கேட்கத் தயாராயிருந்தவர்கள், யூத விசுவாசத்தின் சுத்தத் தன்மையை

*கிறிஸ்தவமானது எப்படி அழித்துக் கொண்டிருந்தது என்பது பற்றிய ஆவேசமான பிரசங்கமொன்றை எதிர்பார்த்திருந் திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு மாறாக, இயேசுவே தேவனுடைய குமாரன் என்ற ஒரு பிரசங்கத்தை அவர்கள் பெற்றார்கள்!*

*அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலேயே முதன்முறையாக, இயேசு, "தேவனுடைய குமாரன்" என்று பிரசங்கிக்கப்பட்டார்! பவுல் அப். 13:32ல், ஒரு பகுதியை பிரசங்கிக்கிறார். தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில்[7] இயேசு தேவனுடைய குமாரனாகச் சவுலுக்குத் தரிசனமாகியிருந்தார், இந்த மாபெரும் சத்தியத்தை அனைவரும் அறிய வேண்டு மென்று சவுல் விரும்பினார். இந்த அப்போஸ்தலரின் எழுத்துக் களில் "தேவனுடைய குமாரன்" என்பதே மையக் கருத்தாயிற்று.*

*அங்கிருந்தவர்கள் அந்தச் செய்தியைக் கேட்டுத் திகைப் படைந்தார்கள், அந்தச் செய்தியளித்தவரைப் பார்த்து அவர்கள் இன்னும் அதிகமாய்த் திகைப்படைந்தார்கள். "கேட்டவர் களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத் திற்குக் கொண்டு போகும்படி வந்தவன் இவனல்லவா என்றார்கள்" (9:21) என்று நாம் வாசிக்கின்றோம்.*

*நாட்கள் சென்ற போது, சவுல், "இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்" தொடர்ந்து பேசினார் (9:27). "சவுல் அதிகமாகத் திடன் கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப் படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப் பண்ணினான்'' (9:22). ''திருஷ்டாந்தப்படுத்தி'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கக் கூட்டு வார்த்தை யானது, "ஒன்று சேர்த்தல், ஒருமைப்படுத்துதல், ஒன்று சேர்த்து முடிந்து வைத்தல்'' என்ற அர்த்தமுடையதாகும். பவுல், மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளை மேற்கோள் காட்டி, பிறகு அவற்றை இயேசுவின் வாழ்க்கையின் உண்மைகளுடன் எடுத்துரைத்துக் கொடுத்தார் (அப். 13:6-14; 17:1-3, 10 ஆகியவற்றையும் காணவும்) இவ்விரு மூலங்களையும் "ஒன்றாக முடிந்து" கொடுத்த செயலானது இயேசுவே மேசியா என்பதற்கு வல்லமையான நிரூபணத்தைத் தந்தது!*

*இயேசுவே மேசியா என்று அறிவித்ததைக் காட்டிலும்*

அதிகமானவற்றைச் சவுல் செய்தார். தம்மைப் போலவே தமது சக யூதர்களும், தங்கள் கடமைப்பாட்டை மாற்றிக் கொள்வது தேவையென்று அவர்களுக்கு அவர் கூறினார்! அவர், "... தமஸ்குவில் ... அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று" அறிவித்தார் (26:20).

தமஸ்குவில் சவுல் இருந்த தொடக்க நாட்கள் அவரது ஊழியத்திற்கு முன்மாதிரியை அமைத்தன. அவர் எருசலேமுக்குச் சென்றபோது, "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே [அவர்களின் ஜெப ஆலயங்களில் (இ.வ 6:9)] பேசித் தர்க்கித்தான்" (9:28, 29). இந்த அப்போஸ்தலர் தொடர்ந்து பயணம் செய்கையில் எப்பொழுதும் முதலில் ஜெப ஆலயத்திற்குச்[8] செல்வதே அவரது திட்டத்தின் அமைப்பாக இருந்தது - மற்றும் அவரது செய்தியானது எப்பொழுதுமே, "இயேசு ... தேவனுடைய குமாரனாக இருக்கின்றார்" என்பதாகவே இருந்தது (9:20; 1 கொரி. 2:2; கலா. 6:14 ஐயும் காணவும்).

சவுலின் எடுத்துக்காட்டானது ஒவ்வொரு புதுக் கிறிஸ்தவரும், அது போலவே செய்வதற்குத் தகுதியுள்ளதாக இருக்கின்றது. முதலாவதாக, அவர் உடனடியாகப் பேசத் தொடங்கினார் என்று நாம் காணுகின்றோம். உண்மையில் அவர்கள் அவரை அமைதியாக இருக்கச் செய்ய முடியாமல் போயிற்று! இரண்டாவதாக, அவர் *எங்கிருந்தாரோ அங்கேயே* பேசத் தொடங்கினார். நாம் கிறிஸ்தவர்களாவதற்கு முன்பு நம்மை அறிந்திருப்பவர்களிடத்தில் பேசுவதென்பது பெரும்பாலும் மிகவும் கடினமானதாகும், ஆனால் சவுல் அவரை நன்கு அறிந்தவர்களிடமே பேசத் தொடங்கினார். மூன்றாவதாக, அவர் *எதை அறிந்திருந்தாரோ,* அதைப் பேசத் தொடங்கினார். அவர் பிரசங்கிக்கத் தொடங்கிய போது ஏவப்பட்டோ அல்லது ஏவப்படாமலோ இருந்திருக்கலாம்.[9] அவர் ஏவப்பட்டிருந்தாலும் ஏவப்படாதிருந்தாலும், அவரிடத்தில் மற்றவர்களுக்குக் கூறுவதற்கென்று ஒரு வரலாறு எப்பொழுதுமே தயாராக இருந்தது! நான்காவதாக, இயேசு கிறிஸ்துவும், அவர் சவுலுக்குச் செய்திருந்ததுமே எப்பொழுதும், அவரது பிரசங்கத்தின் மையக் கருத்தாக இருந்தது!

நாம் பின்வரும் நடைமுறைகளை மேற்கொள்ளுவோம்:

*(1) ஒவ்வொரு புதுக் கிறிஸ்தவரும், உடனடியாக இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குக் கூறவேண்டியது தேவை. "அமைதியான ஒரு சீஷர் நிபந்தனைகளில் முரண்பாடுள்ளவர் ஆகின்றார்"[10] (2) ஒவ்வொரு புதுக் கிறிஸ்தவரும் "தாம் எங்கிருக்கின்றாரோ" அங்கிருந்தே இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குக் கூறத் தொடங்க வேண்டியது தேவை. சவுல் பிரசங்கிக்கத் தொடங்கியபோது யூதர்கள் திகைப்படைந்தது போலவே, புதுக் கிறிஸ்தவரை நன்றாக அறிந்தவர்களும் திகைப்படையலாம்! (இ.வ. 1 பேது. 4:4). (3) ஒவ்வொரு புதுக் கிறிஸ்தவரும், தாம் எதை அறிந்திருக்கின்றாரோ, அதைக் கூற வேண்டியது தேவை. அவர் அதிகமாய் அறியாமலிருக்கலாம், ஆனால் தாம் விசுவாசிப்பது என்ன என்பது பற்றியும், தாம் கிறிஸ்தவரா வதற்குச் செய்தது என்ன என்பது பற்றியும் அவர் அறிந்திருக் கின்றார். முதலில் அவர் அவைகளைக் கூற முடியும் - பிறகு அவர் அதிகமாய்க் கற்றுக் கொள்ள முடியும். (4) ஒவ்வொரு புதுக் கிறிஸ்தவரும், இயேசுவையே தமது செய்தியின் மையமாகக் கொண்டிருக்க வேண்டியது தேவை.*

*புதிய கிறிஸ்தவர்களிடம் பெரும்பாலும் - நாம் கொஞ்ச மாகவே எதிர்பார்க்கின்றோம் - பிறகு நமது எதிர்பார்ப்பின் படியே அவர்கள் வாழும் போது நாம் ஆச்சரியப்படுகின்றோம்! சிறு குழந்தைகளிடம் நாம் அதிகமாய் எதிர்பார்ப்பதில்லையா? அவர்கள் வளர்ந்து, நடக்கவும் பேசவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் - அவர்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்க நம்மால் முடிந்த எல்லாவற்றை யும் செய்கின்றோம். புதிய கிறிஸ்தவர்களும் கூட இயேசுவுக் குள் உள்ள தங்கள் புதிய வாழ்க்கை பற்றி உடனடியாக வெளிப்படுத்தத் தொடங்கும்படிக்கு, நம்மால் இயன்ற ஒவ்வொரு வழியிலும் நாம் அவர்களை ஊக்குவிப்போம்!*

## *உங்கள் உணவை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள் (9:22)*

*கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொரு குழந்தைக்கும், அவர் களுக்கு வளர்ச்சி தேவை என்பதை நாம் வலியுறுத்த வேண்டி யதே முக்கிய கருத்தாக இருக்கின்றது. "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை*

அறிகிற அறிவிலும் வளருங்கள்" (2 பேது. 3:18). வளர்ச்சியிருக்கிறதா இல்லையா என்பதே மிக முக்கியமானதாக இருக்கின்றதே தவிர வளர்ச்சி மெதுவானதா வேகமானதா என்பது அதைக் காட்டிலும் முக்கியமானதல்ல. புதிதாய்ப் பிறந்த சிறு குழந்தை வளரவில்லையென்றால், அது இறக்கின்றது.

அப். 9:22ல், ''சவுல் அதிகமாய்த் திடன் கொண்டு … யூதர்களைக் கலங்கப் பண்ணினான்" என்றுள்ளது. இது வசனம் 19ல் சவுல் ஞானஸ்நானம் பெற்ற பிறகு "போஜனம் பண்ணிப் பலப்பட்டான்" என்பதற்கு நேர்மாறானதாகும். முதலாவதாக சவுலின் சரீரம் பலப்பட்டது; பிறகு அவரது ஆத்துமா பலப்பட்டது. சவுலுக்கு எதிர்ப்புகள் அதிகமான போது, அவரது பலமும் அதிகப்படுவது தேவையாயிருந்தது - அது நடைபெற்றது. NIV மொழிபெயர்ப்பில், ''சவுல் வல்லமையில் அதிகமதிகமாய் வளர்ந்து யூதர்களைத் திகைப்படையச் செய்தார்" என்றுள்ளது.

சவுல் எவ்விதம் தமது பலத்தில் வளர்ந்தார் என்பதை லூக்கா கூறவில்லை, ஆனால் அந்த அப்போஸ்தலரின் வளர்ச்சிக்கு இயேசுவைப் பற்றிய அவரது அறிவும், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தார் என்பதுமே முக்கிய காரணியாய் இருந்ததென்று நாம் அறிகின்றோம். பேதுரு, "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேது. 2:2) என்று எழுதினார் (எபி. 5:12-14 ஐயும் காணவும்). சவுல், இயேசுவைப் பற்றிய தமது அறிவை இரு வழிகளில் பெற்றார்.

கர்த்தரிடத்திலிருந்து வந்த நேரடியான வெளிப்படுத்துதல் சவுல் தமது அறிவைப் பெற்ற மிக முக்கியமான வழியாக இருந்தது. பின்னாளில் பவுல்,

> மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார் … எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்; அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போய், … (கலா. 1:11, 12, 17).

*இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டிருந்தார் மற்றும் அவரே மேசியா என்ற வெளிப்படுத்துதலையும், இயேசு எதிர்பார்த்த வெளிப்படுத்துதலையும் தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் சவுல் பெற்றார். விசேஷித்த வெளிப்படுத்துதலைச் சவுல் எப்பொழுது அல்லது எங்கு பெற்றார் என்று நாம் அறிய வில்லை. "நான் அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போய்" (கலா. 1:17) என்ற வார்த்தைகளில் ஒரு சாத்தியக் கூறு இருப்பதாக ஆலோசனை முன் வைக்கப்படுகின்றது. தமஸ்குவுக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள பெரிய பாலைவனப் பகுதியாக அரபு தேசம் இருந்தது, அதன் கிழக்கே ஐப்பிராத்து நதியும், தெற்கே செங்கடலும் இருந்தன. தமது தொடக்க கால ஊழியத்தில், ஒரு குறிப்பிட்ட சமயத்தில், சவுல் தமஸ்குவை விட்டுப் புறப்பட்டு அரபி தேசம் சென்று, மறுபடியும் தமஸ்கு வருமுன் அங்கு (அரபி தேசத்தில்) சில நாட்கள் இருந்தார்.[11] இது ஒரு ஆழ்ந்த சிந்தனை (ஒரு ''ஆவிக்குரிய தியானம்'') என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது என்று பல விளக்கவுரை யாளர்கள் நம்புகின்றார்கள், மற்றவர்கள் இது (அவர் தமஸ்குவில் செய்திருந்தது போலவே) பிரசங்கித்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்று நினைக்கின்றார்கள். சவுல் ஏன் அரபு தேசம் சென்றார் என்பது பற்றியோ, அல்லது அவர் அங்கு என்ன செய்தார் என்பது பற்றியோ வேதாகமம் ஒன்றும் கூறுவதில்லை யாகையால், இதைப் பற்றி உறுதியான கருத்து எதையும் நாம் அறிய முடியாது. குறைந்த பட்சம், இந்த வேளையில் அவர், பின்னாளில் 2 கொரி. 12:1ல் குறிப்பிடும் "தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகளில்" சிலவற்றைப் பெற்றிருக்கச் சாத்தியமுண்டு.*

*சவுல் இந்த வெளிப்படுத்துதல்களை கர்த்தரிடத்திலிருந்து எங்கு, எப்போது பெற்றிருந்தாலும், அவைகளை இயேசுவின் வாழ்வு மற்றும் போதனையை உள்ளடக்கியவைகளாகவே இருந்தன. பின்னாளில் அவர், "நான் உங்களுக்கு ஒப்புவித்த தைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து" (1 கொரி. 11:23)[12] என்று எழுதினார். தொடக்கத்திலிருந்த பன்னிரெண்டு அப்போஸ் தலர்களும் முதலில் இயேசுவால் போதிக்கப்பட்டு, பிறகு அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகளாயிருந்தார்கள்*

(அப். 1:21, 22). பவுலின் அனுபவமானது இந்த ஒழுங்கு முறையைத் திருப்பியமைத்ததாக இருந்தது: முதலில் அவர் ஒரு சாட்சியாகி, பிறகு அவர் இயேசுவால் போதிக்கப்பட்டார்.[13]

இரண்டாவதாக, மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொண்டதினால் பவுல் அறிவில் வளர்ந்தார். அவர் கலாத்தியருக்கு எழுதுகையில், தாம் அப்போஸ்தலர்களை உடனடியாகச் சென்று சந்திக்கவில்லை என்பதை வலியுறுத்தினார், ஆனால், "மூன்று வருஷம் சென்ற பின்பு [அதாவது, அவரது மனமாற்றத்திற்குப் பின் 'மூன்று வருஷங்களான பிறகு'] கேபாவை [பேதுருவின் மற்றொரு பெயர் (யோவா. 1:42)] கண்டு கொள்ளும்படிக்கு நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன்" (கலா. 1:18) என்று அவர் குறிப்பிட்டார். பேதுருவும் சவுலும் இயேசுவைப் பற்றிய அவர்களுடைய அனுபவங்களையும், அறிவையும் பகிர்ந்து கொண்ட அந்த நேரத்தில் நீங்கள் அங்கிருந்திருக்க உங்கள் மனதில் விருப்பம் எழுகின்றதல்லவா? பேதுரு கர்த்தரை மறுதலித்ததைக் கூறுகையில் அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியதையும், தேவனுடைய மக்களைத் துன்பப்படுத்தியதை சவுல் நினைவு கூருகையில் அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியதையும் என்னால் காண முடிகின்றது.

கிறிஸ்துவுக்குள்ளான குழந்தையின் நிலையில் இருக்கும் ஒருவர் பலமாக வளருவதற்கு, தேவனுடைய வசனம் என்ற சத்துணவு அவருக்குக் கட்டாயம் தேவைப்படுகின்றது. சவுலுக்கு நேரடியான வெளிப்படுத்துதல் மற்றும் தனிப்பட்ட தகவல் ஆகியவை மூலம் தரப்பட்டவைகளை, வேதாகமம் இன்று நமக்கு தருகின்றது. பின்னாளில் அவர், தீமோத்தேயுவுக்கு, "கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை ..." (2 தீமோ. 3:15) என்று கூறினார். அவர் வேதவசனங்களை ஒரு கருவிக்கு ஒப்பிட்டு அந்த இளம் பிரசங்கியார் "வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்" (2 தீமோ. 2:15) இருக்கும்படிக்குத் தமது கருவியை நல்லமுறையில் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளும்படி அவர் அறைகூவல் விடுத்தார்.

புதுக் கிறிஸ்தவர்களுக்கு இதைக் காட்டிலும் முக்கியமான

வேறு ஆலோசனைகள் மிகச் சிலதான் இருக்கின்றன: தேவனு டைய வசனத்தைப் படியுங்கள், படியுங்கள், படியுங்கள்! ''மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்த'' (17:11) பெரோயா பட்டணத்தாரின் நற்குணத்தைப் பின்பற்றுங்கள். உங்களுக்கென்றே வேதாகமத்தைப் படியுங்கள்; படிப்பதற் கென்று திட்டவட்டமாக ஒரு நேரத்தை ஒதுக்குங்கள், ஒருவேளை முடிந்தால் படிப்புத் திட்டம் ஒன்றைப் பயன் படுத்துங்கள். மேலும் போதிக்கப்படுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் அனுகூலப்படுத்திக் கொள்ளுங்கள். கிறிஸ்தவர் என்ற முறையில் நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் ஒரு பாகமாய் இருக்கின்றீர்கள். கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதர, சகோதரிகளுடன் வேத வகுப்புகள் மற்றும் ஆராதனை ஆகியவற்றில் தவறாமல் உண்மையான உள்ளத்துடன் கலந்து கொள்ளுங்கள், அவர்களுடன் சேர்ந்து படியுங்கள். உங்களின் ஆவிக்குரிய உணவை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

## முடிவுரை

சுய-பரிசோதனையுடன் நாம் முடிப்போம். நாம் ஒவ்வொரு வருமே, "கிறிஸ்தவன் என்ற முறையில் நான் எவ்வகையான வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றேன்?'' என்று கேட்டுக் கொள்வோம். ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டிய அளவு பெற்றிருக்காத கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வரும் கவலைக்குரிய வார்த்தைகளை எழுதினார்: "மேலும் சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக் கூடாமல், ... கிறிஸ்துவுக்குள் குழந்தை களென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங் கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன் ... இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை" (1 கொரி. 3:1, 2).

ஒரு குழந்தையாகப் பிறப்பதென்பது மிகவும் சிறந்ததாகும்; ஒரு குழந்தையாகவே இருப்பது என்பது மிகவும் துன்பகர மானதாகும். நீங்கள் செய்து கொள்ளும் சுய பரிசோதனை யானது, நீங்கள் வளரவேண்டியபடி வளர்ந்திருக்கவில்லை என்று உங்களுக்கு வெளிப்படுத்தினால், ''... தலையாகிய

*கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவர்களாயிருக்க" (எபே. 4:15) முடிவு செய்யுங்கள்.*

## பிரசங்கக் குறிப்புகள்

*ரிச்சர்ட் ரோஜர்ஸ் அவர்கள், அப். 9:27ன்படி, எருசலேம் சபையார் சவுலைப் பின்வரும் காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பர்னபா கூறியதாகக் குறிப்பிட்டார்: (1) சவுல் கர்த்தரைத் தரிசித்திருந்தார், (2) அவர் கர்த்தருடன் பேசியிருந்தார் மற்றும், (3) அவர் கர்த்தரைப் பற்றி மற்றவர்களுக்குக் கூறியிருந்தார். நாமும் கூட "கர்த்தரை (வேதாகமத்தைப் படிப்பதினால்) காண வேண்டும்", கர்த்தரிடத்தில் (ஜெபத்தில்) பேச வேண்டும் மற்றும் இயேசுவைப் பற்றி (சுவிசேஷ ஊழியத்தினால்) மற்றவர்களுக்குக் கூற வேண்டும் என்று ரோஜர்ஸ் கூறினார். இந்தப் பண்புகளை ரோஜர்ஸ் அவர்கள்* Conversion *(மனமாற்றம்),* Communion *(தொடர்பு), மற்றும்* Confession *(அறிக்கையிடுதல்) என்று அழைத்தார்* (Richard Rogers, "The Need of Placing Membership in a Local Church," Sermon preached at the Sunset church of Christ, Lubbock, Texas, n.d.).

---

குறிப்புகள்

*[1]"உறுப்பினர்" என்ற வார்த்தைப் பிரயோகமானது ரோமர் 12 மற்றும் 1 கொரிந்தியார் 12 ஆகிய அதிகாரங்களில் இருந்து வருகின்றது, அவைகளில் ஒவ்வொரு கிறிஸ்தவரும், இயல்பான சரீரத்தின் அவயவங்களுடன் (உறுப்புக்களுடன்) ஒப்பிடப்படுகின்றார்கள்: கால், கை மற்றும் கண், காது முதலியன. ஒரு உள்ளூர் சபையில் உறுப்பினாராயிருப்பதென்பது "ஒருவரின் பெயர், வருகைப் பதிவேட்டில் இருப்பது" என்பது மட்டுமாகி விடாது, ஆனால் அவர் அந்த உள்ளூர் சபையில் செயல்படும் ஒரு பாகமாயிருக்க வேண்டும். ஒரு உள்ளூர் சபையின் "உறுப்பினராகுதல்" என்பது அந்த சபையில் ஊழியத்தில் இணைந்து செயல்பட விரும்புவதைத் தெரியப்படுத்துவதாய் இருக்கின்றது. [2]சிலவேளைகளில், ஒருவர் தமது வீடு இருக்கும் ஊர் அல்லாத மற்றொரு ஊரில் ஞானஸ்நானம் பெற்று, பிறகு தமது ஊரிலிருக்கும் சபையின் உறுப்பினராவதற்குத் திட்டமிடுகின்றார். [3]வசனத்தின்படி பார்க்கும்போது, ஒவ்வொரு உள்ளூர் சபையும் கட்டாயம் மூப்பர்களைக் கொண்டதாயிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல, ஆயினும்*

ஒவ்வொரு உள்ளூர் சபையும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தகுதியுள்ள மனிதர்களை மூப்பர்களாக நியமிக்கப் பிரயாசப்பட வேண்டும் (தீத்து 1:5). ஒரு உள்ளூர் சபையில் மூப்பர்கள் இல்லையென்றாலும் கூட, யாரேனும் ஒருவருக்கு நாம் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம். ஒரு உள்ளூர் சபையில் உறுப்பினராயிருப்பதென்பது நமக்கு இப்படிப்பட்ட பொறுப்புணர்வை கொடுக்கக் கூடியதாயிருக்கின்றது. [4]சவுலுக்கு இருந்திராத ஒரு பிரச்சனை நமக்கு இருக்கின்றது: சவுலின் நாட்களில் நாமகரணக் கூட்டங்கள் எதுவும் இருந்ததில்லை; ஆனால் இந்நாட்களில் நாமகரணக் கூட்டங்கள் இருக்கின்றன, எனவே நாம் "சேர்ந்து கொள்ளப்பார்க்கும்" சபை தேவனுடைய வார்த்தையின் கொள்கை களைப் பின்பற்றுகின்றதா என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். [5]இது, ஒரு உள்ளூர் சபையில் எவரொருவரையும் அல்லது ஒவ்வொருவரையும் (அவர் கிறிஸ்தவர் என்று கூறும்போது) உடனே சேர்த்துக் கொள்வதென்பது தேவையில்லை என்பதைக் காட்டுகின்றது. ஆயினும் வேறுவகையாகச் செய்வதற்கு வன்மையான காரணம் எதுவும் இல்லாதபோது, வசனரீதியாக ஞானஸ்நானம் பெற்ற (அதன் மூலம் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்ட) வர்கள் வழக்கமாய் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். [6]அவர் தமது கண்கள் பற்றிய பிரச்சனையிலிருந்து அவ்வளவு சீக்கிரமாய் மீண்டது பற்றி அவர்கள் ஆச்சரியமடைந்திருக்கலாம், ஆனால் அதன் பிறகு அவரைக் காணுவதில் அவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்கள். தமஸ்குவிலிருந்த ஜெப ஆலயமே அவரது அடைவிடமாயிருந்தது (9:2). [7]இது "தேவனுடைய குமாரன்" என்ற சொற்றொடர் கிறிஸ்துவின் தரிசனத்து டன் தொடர்பு படுத்திப் பயன்படுத்தப்பட்டது என்று கூறுவதற்கல்ல, ஆனால் இயேசு பரலோகத்திலிருந்து பேசுகிறவராகவே அதாவது தேவனுடைய பிரசன்னத் தில் இருக்கிறவராகவே தரிசனமானார்! [8]அந்தக் குறிப்பிட்ட இடத்தில் ஒரு ஜெப ஆலயம் இருந்தால் அவர் முதலில் அங்குதான் சென்றார், பொதுவாக இவ்வாறே இருந்தது. இதற்கு ஒரு விதிவிலக்கை அப். 16ல் பவுலின் பிலிப்பிப் பட்டண ஊழியத்தில் காணவும். [9]ஏதோ ஓரிடத்தில் பவுல் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை (அல்லது அதற்குச் சமமானதைப்) பெற்றார், அது அவர் "உண்மையான ஒரு அப்போஸ்தலரின் அடையாளங்களைச்" செய்யும்படிக்கு அவரைப் பலப்படுத்தியது, அவைகளில் "அடையாளங்கள், அற்புதங்கள், அதிசயங்கள்" ஆகியவை அடங்கியிருந்தன (2 கொரி. 12:12), அவைகளே அவர் கிறிஸ்தவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களுக்கு அற்புத வரங்களை அவர் கொடுக்கும்படி செய்தன (அப். 19:1-7). அப். 9ன் நிகழ்ச்சிகளின்போதா அல்லது அதற்குப் பின்னாலோ, எப்போது அவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை (அல்லது அதற்குச் சமமானதைப்) பெற்றார் என்பதை லூக்கா கூறவில்லை. அநேகமாக சவுல் ஏவுதலினால் தமஸ்குவின் ஜெப ஆலயங்களில் பேசி யூதர்களைக் "கலங்கப் பண்ணியிருக்கலாம்" ஆனால் நிச்சயமாக இதை நாம் அறிய முடிவதில்லை. [10] Rick Atchley, "உள்ளூர் சபையில்லாத ஒரு மனிதர்", செப்டம்பர் 22, 1985ல் டெக்ஸாஸ், அபிலைன் என்ற இடத்தில் உள்ள தென்மலைகள் கிறிஸ்துவின் சபையில் பிரசங்கித்த பிரசங்கத்திலிருந்து.

[11]கலா. 1:17ஆ. வேறு எவ்விடத்திற்கும் போலவே, இந்த வசனமானது அப். 9:22 மற்றும் 9:23 வசனங்களுக்கிடையில் நன்றாகப் பொருந்துகின்றது. [12]கர்த்தருடைய பந்தியை இயேசு ஏற்படுத்தினது பற்றிய பவுலின் இந்தப் பதிவானது, இந்த சம்பவத்தை சுவிசேஷ நூல் எதிலும் பதிவு செய்வதற்கு முன்னதாகவே எழுதப்பட்டதாகும். [13]ஆகவே அவர் வேறு எந்த அப்போஸ்தலரைக் காட்டிலும் எந்த வகையிலும் தாழ்ந்தவரல்ல (2 கொரி. 12:11).